


20.06.2024

தலைப்புச் செய்திகள்

1. கள்ளக்குறிச்சி விஷச்சாராய சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து விசாரிக்க ஒருநபர் ஆணையம் அமைத்து முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

2. கள்ளக்குறிச்சி சம்பவம் குறித்து ஊடீஐ விசாரணை கோரி அஇஅதிமுக சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

3. தமிழக சட்டப்பேரவையில் மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் அவை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

4. ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான, 84 புதிய வளர்ச்சிதிட்டப் பணிகளுக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

5. ஐ.சி.சி. உலககோப்பை 20-20 கிரிக்கெட் சூப்பர் 8 சுற்றில் பார்படாசில் இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

முதலமைச்சர் கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி கருணாபுரம் விஷச்சாராய சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் எச்சரித்துள்ளார்.

கருணாபுரம் பகுதியில் கள்ளச்சாராயம் அருந்தியதால் 38 பேர் உயிரிழந்ததோடு 109 பேர் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், இதுதொடர்பாக சென்னையில் இன்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் முதலமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

விஷச்சாராய சம்பவம் குறித்து முழுமையான விசாரணை மேற்கொண்டு இதற்கான காரணிகளை கண்டறிய ஓய்வு பெற்ற நீதிபதி திரு. கோகுல்தாஸ் தலைமையில் ஒருநபர் ஆணையம் அமைக்கவும் முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

எதிர்காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் தமிழ்நாட்டில் மீண்டும் நடைபெறாமல் இருப்பதற்கான பரிந்துரைகளை இந்த ஆணையம் 3 மாதங்களுக்குள் வழங்க அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

உள்துறை முதன்மை செயலாளர், காவல்துறை இயக்குநர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று 2 தினங்களில் விசாரணை அறிக்கையை அளிப்பார்கள் என்றார்.

சமூகத்தை பாழ்படுத்தும் இதுபோன்ற செயல்கள் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படும் என்று கூறிய முதலமைச்சர், விஷச்சாராய விற்பனையில் தொடர்புடைய 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

மெத்தனாலை வழங்கியவர்களை கண்டறிந்து அவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

விஷச்சாராய சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாயும், சிகிச்சைபெற்று வருபவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்.

இதனிடையே இச்சம்பவம் குறித்த சி.பி.சி.ஐ.டி.யின் முதல்கட்ட விசாரணை தொடங்கியுள்ளது.

இந்நிலையில் தமிழக ஆளுநர் திரு.சு.ரேவி மற்றும் எதிர்கட்சியினர், ஆளும் திமுக அரசு மீது குற்றம்சாட்டியிருப்பதோடு இப்பிரச்சனையில் அரசு மெத்தனமாக செயல்படுவதாக குறைகூறினார்கள்.

கள்ளச்சாராய சம்பவத்தில் தொடர்புடைய சின்னதுரை என்பவரின் பேரில் ஏற்கனவே 70 வழக்குகள் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இதனிடையே இச்சம்பவத்திற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் தமது பதவியை ராஜினாமா செய்ய வேண்டுமென்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி.கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

கள்ளக்குறிச்சியில் இன்று பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து செய்தியாளர்களிடம் பேசியஅவர், கள்ளச்சாராய விற்பனை இப்பகுதியில் அதிகளவில் புழக்கத்தில் உள்ளதாகவும், இதற்கு எந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இவ்விஷயத்தில் சி.பி.ஐ. விசாரணை நடத்தக்கோரி அஇஅதிமுக சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என்றார்.

கள்ளக்குறிச்சி சம்பவம் மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிப்பதாக பி.ஜே.பி. மாநில தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்திருக்கிறார்

சமூக வலைதளப்பதிவில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் கடந்த 2 ஆண்டுகளில் திமுக ஆட்சியில் நடைபெற்றுள்ள கள்ளச்சாராய உயிரிழப்புகள் தமிழகம் பின்நோக்கி செல்கிறதா என்ற அச்சத்தை ஏற்படுத்தி உள்ளதாக குறைகூறினார்

இந்த சம்பவத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தார்மீக பொறுப்பேற்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்

□□□□□□□

தமிழக சட்டப்பேரவை

தமிழக சட்டப் பேரவையின் கூட்டத்தொடர் இன்று காலை 10 மணிக்கு, பேரவைத்தலைவர் திரு. அப்பாவு தலைமையில் தொடங்கியது.

முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எம். வீரப்பன், இந்திரகுமாரி உள்ளிட்ட 17 உறுப்பினர்களின் மறைவிற்கு பேரவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் குவைத் நாட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கும், தற்போதைய பேரவையில் உறுப்பினராக இருந்து மறைந்த விக்ரவாண்டி தொகுதி உறுப்பினர் புகழேந்தி மறைவிற்கும் பேரவையில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மறைந்த உறுப்பினர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

வரும் 29-ம் தேதிவரை காலை, மாலை என இருஅமர்வுகளாக நடைபெறவுள்ள இக்கூட்டத்தொடரில் நாளை நீர்வளத்துறை தொடர்பான மானியக்கோரிக்கை மீதான விவாதம் இடம்பெறும்.

□□□□□□□

யோகா

சர்வதேச யோகா தினம் நாளை கொண்டாடப் படுவதை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி ஸ்ரீநகரில் நாளை இளையோருக்கு ஆளுமை என்ற தலைப்பிலான பிரம்மாண்ட யோகா நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

தால் ஏரிக்கரையில் நடைபெறும் இப்பிரம்மாண்ட நிகழ்ச்சியில் 7 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பங்கேற்கின்றனர்.

முன்னதாக ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான, 84 புதிய வளர்ச்சிதிட்டப் பணிகளுக்கு பிரதமர் இன்று அடிக்கல் நாட்டுவதுடன், முடிவடைந்த பணிகளை தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக ஜம்முகாஷ்மீர் மாநில அரசு வேலைகளுக்கு தேர்வு செய்யப்பட்ட 2 ஆயிரம் பேருக்கு பிரதமர் பணி நியமன ஆணைகளை வழங்குகிறார்.

ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான வேளாண் துறை மேம்பாட்டு திட்டங்களையும் பிரதமர் இன்று அறிமுகம் செய்கிறார்.

□□□□□□□

யோகா தொடர்ச்சி

சர்வதேச யோகா தினத்தை ஒட்டி நாடுமுழுவதும் பல்வேறு யோகா நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கோவையில் நடைபெறும் யோகா நிகழ்ச்சியில் நாளை பங்கேற்கிறார்

நாகையில் சர்வதேச யோகா தினத்தை ஒட்டி நூற்றுக்கும் மேற்பட்ட தனியார் பள்ளி மாணாக்கர் தொடர்ச்சியாக 1 மணிநேரம் யோகா பயிற்சிகளை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

□□□□□□□

யோகா வெளிநாடு

சர்வதேச யோக தினத்தை ஒட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் மகளிர் ஆளுமைக்காக யோகா என்ற தலைப்பில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு நாளை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய யோகக்கலை கடல் தாண்டியும், மக்களை பெரிதும் ஈர்த்து வரும் நிலையில் அமீரகத்தில் நடைபெறவுள்ள யோகா நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்கின்றனர்.

இந்நிலையில் வரும் சனிக்கிழமை துபாயில் உள்ள இந்திய இயக்கத்தின் சார்பில் 4 ஆயிரம் பேர் பங்கேற்கும் பிரம்மாண்ட யோகா நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

துபாயில் உள்ள இந்திய தூதரகம், ஷார்ஜா உடன் இணைந்து 5 ஆயிரம் பேர் பங்கேற்கும் மாபெரும் யோகா முகாமை நடத்துகிறது.

□□□□□□□□

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அரசுமுறை பயணமாக இன்று கொழும்பு சென்றடைந்தார்.

அமைச்சர் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில் அந்நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாக கூறியுள்ளார்.

அயல்நாட்டு உறவிற்கு இந்திய முக்கியத்துவம் அளித்து வருவதாகவும், கடல்சார் சாகர் கொள்கையில் இலங்கை முக்கிய இடத்தில் உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

□□□□□□□□

திரௌபதி முர்மு

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவின் 66-வது பிறந்தநாளை ஒட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் அவரை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியும் சமூக வலைதளத்தின் மூலம் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்

இந்நிலையில் குடியரசு தலைவர் புதுதில்லியில் உள்ள ஸ்ரீ ஜெகந்நாத் கோவிலில் இன்று வழிபாடு மேற்கொண்டார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா தேசிய நிறுவனத்தை இன்று அவர் பார்வையிட்டு அங்குள்ள மாற்றுத்திறன் படைத்த குழந்தைகளுடனும், அவர்களின் பெற்றோர்களுடனும் அவர் கலந்துரையாடினார்.

□□□□□□□□

யூ.ஜி.சி நெட்

நாடுமுழுவதும் நேற்று முன்தினம் நடைபெற்ற யூ.ஜி.சி நெட் தேர்வுகள் ரத்து செய்யப்படுவதாக மத்திய கல்வி அமைச்சகம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்கள், மற்றும் கல்லூரிகளில் உதவி பேராசிரியர் பணியிடத்திற்கு தகுதி பெறுவதற்கும், மத்திய அரசின் இளநிலை ஆராய்ச்சி உதவித்தொகை பெறுவதற்கும் தேசிய தேர்வுகள் முகமை நடத்திய இத்தேர்வை 9 லட்சத்திற்கும் மேற்பட்டோர் எழுதியிருந்தனர்

இந்நிலையில் தேர்வில் முறைகேடுகள் நடைபெற்று உள்ளதாக தேசிய சைபர் குற்றப்பிரிவிலிருந்து தகவல் வந்ததையடுத்து தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது.

புதிய தேர்வுக்கான தேதி தனித்தனியாக பின்னர் அறிவிக்கப்படும் என்றும், இதுகுறித்து ஊடீஜ விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

□□□□□□□

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வருவாய் தீர்வாயம் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மீது ஒருவார காலத்திற்குள் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, ஆட்சித்தலைவர் திருமதி. ஆ'ா அஜித் தெரிவித்துள்ளார்.

தர்மபுரி அரூர் அருகே அரசு தொடக்கப்பள்ளியில் காலை உணவுத்திட்ட பணிகளை ஆட்சித்தலைவர் திருமதி.சாந்தி இன்று ஆய்வு செய்தார்.

□□□□□□□

சாகர் கவாச்

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை அலையாத்தி காட்டுப்பகுதிகளில் சாகர் கவாச் எனும் பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி இன்று இரவுவரை நடைபெறுகிறது

இதேபோல் மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி கடற்கரையில் நடைபெற்று வரும் பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மகாபாரதி பார்வையிட்டார்.

□□□□□□□

கன்னியாகுமரி – வாய்ஸ்

கன்னியாகுமரி விவேகானந்தர் பாறை - திருவள்ளுவர் சிலைக்கு இடையே கண்ணாடி கூண்டு பாலம் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

..வாய்ஸ்..

□□□□□□□

வானிலை

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

□□□□□□□□

கிரிக்கெட்

ஐ.சி.சி. உலககோப்பை 20-20 கிரிக்கெட் சூப்பர் 8 சுற்றில் பார்படாசில் இன்றிரவு 8 மணிக்கு இந்தியா - ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

செயின்ட் லூசியாவில் இன்று நடைபெற்ற சூப்பர் 8 போட்டியில் இங்கிலாந்து - வெஸ்ட் இண்டீஸை 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

□□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

□□□□□□□□